# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு
## (திருத்தம்)

***2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால்*
*2018, ஓகத்து மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, யூன் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***261 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கென சேவை விதிப்பனவை அறவிடுவதற்கான அடிப்படையை குறித்துரைப்பதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை* IV *ஐ திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை மீதான சேவை விதிப்பனவை குறித்துரைப்பதாகும்.*

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு
## (திருத்தம்)

ச.வ. - ஒ. 9/2018

### 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பாகம் தொடர்பிலும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாகம் தொடர்பிலும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் -

(அ) உட்பந்தி (ii) இல், "ஒவ்வொன்று தொடர்பிலும்; அல்லது ", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொன்று தொடர்பிலும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அதன் (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(iii) 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால்

இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னதாக, மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின் அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும்; அல்லது";

(3) அதன் உட்பந்தி (iii) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினை சேர்ப்பதன் மூலமும் :-

"(iv) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வைக்கு உட்பட்டதாகவிராத மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின் அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும்; அத்துடன்"; அத்துடன்

(4) அதன் பந்தி (ஆ) வினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர், உற்பத்தித் தீர்வைக்கு உட்படாத மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின் அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வைத் தொகை மீதும்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அட்டவணையைத் திருத்துதல்.

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வட்டவணையின் 1 ஆம் விடயத்தில், "சில்லறை விற்பனை செய்யும் ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மொத்த விற்பனை

அல்லது சில்லறை விற்பனை செய்வதிலிலிருந்தான ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வட்டவணையின் 2 ஆம் விடயத்தில், "சில்லறை விற்பனையிலிருந்து ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்து ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) இப்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.